# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | SC. 301/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | அ.சா– 12 (PW– 12 ) |
| பெயர் | :- | ஹரிகரன் |
| தேதி | :- | 16–09–2025 |

**மனு அனுமதிக்கப்பட்டு சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நிகழ்நிலை புகார்தாரருக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் அது எனக்கு தெரியவில்லை. புகாரில் கைரேகை வைத்துள்ளார். புகாரை யார் எழுதியது என்று நான் விசாரிக்கவில்லை. புகார் வந்து வழக்கு பதிவு செய்தால் அது சம்மந்தமாக காவல் நிலையம் பொது நாட்குறிப்பேட்டில் குறிப்பு எழுதுவோம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 03(C) வரிசையில் குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

22.08.2016-ஆம் தேதியன்று மதியம் 03.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரவு 11.00 மணிக்குதான் அதிகாரவரம்புள்ள நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப் -பட்டது என்றால் சரிதான். புகாரை நாங்கள் சொல்லி புனைந்ததால்தான் 07.00 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவரிடம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் முதல் தகவல் அறிக்கை எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்று முதல்

தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்காடு காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு அதிகபட்சம் 02.00 மணி நேரத்திற்குள் வரமுடியும் என்று சொன்னால் சரிதான்.

காவல் ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த அன்றே என்னை விசாரிக்காமல் 24.09.2016-ஆம் தேதியன்றுதான் விசாரித்தார் என்றால் சரிதான். புகார்தாரருக்கு எழுதப்படிக்க தெரியாது என்றும் காவல் நிலையத்தில் இருந்த அனைவரும் ஆலோசித்து புகாரை புனைந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நான் எங்கு, எப்போது காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் அன்றே காவல் நிலையத்தில் வைத்து ஒப்படைத்தேன்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.